**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் , ஆண்டிபட்டி**

**முன்னிலை :** திரு.H.பாசில் முகமதுBBA.,LLB(Hons).,
நீதித்துறை நடுவர் ,
ஆண்டிபட்டி.

2026 ம் ஆண்டு ஜுலை மாதம் 16 ம் நாள் வியாழக்கிழமை

**Crl.M.P. No. 1776 2026**
**in**
**Cr. No.02/2025**
**STC.677/2025**

திரு.சிவராஜ்
த.பெ.ராஜகோபால்

// எதிர் //

அரசுக்காக காவல் ஆய்வாளர்,
ஆண்டிபட்டி காவல் நிலையம்,
கு. எண்.02/2025,
U/s.189(2), 126(2), 272, 281 BNS ……புகார்தாரர்

இம்மனு இன்றைய தினம் விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.முத்துவேல் அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-I அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

1. மனுதாரர் இம்மனுவில் ஆண்டிபட்டி காவல்நிலைய குற்ற எண் 02/2025 சட்டபிரிவுகள் U/s. 189(2), 126(2), 272, 281 BNS வழக்கில் சம்மந்தப்பட்ட TN 67 AM 0333 என்ற பதிவெண் கொண்ட CHEVROLET TAVERA B4 என்ற வாகனம் வழக்கில் கைப்பற்றப்பட்டு வாகனத்தை இடைக்காலவசமாக பெற்றுக்கொண்டு அசல் ஆர்சிபுக் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது என்றும் மேற்படி வழக்கானது STC.677/2025 கடந்த 08.06.2026 ம் தேதி இந்நீதிமன்றத்தில் தீர்ப்பு பகரப்பட்டது. வாகனத்தினை நிரந்தரமாக வைத்துக்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் எனவே வாகனத்தின் அசல் ஆர்சி புக் தேவைப்படுகிறது எனவே மனுதாரரின் அசல் ஆர்சிபுக்கினை அவர் வசம் ஒப்படைக்க கோரி U/s.498 BNSS பிரிவின் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.**அரசு மற்றும் காவல் துறை தரப்பில்**

கடந்த 08.06.2026 ம் தேதி இந்நீதிமன்றத்தில் வழக்கு முடிவுற்றது மேற்படி மனுதாரரின் அசல் RC BOOK நீதிமன்ற பாதுகாப்பில் இருந்து வரும் நிலையில் மனுதாரர் அசல் ஆர்சிபுக்கியை அவர் வசம் ஒப்படைக்க ஆட்சேபணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

**3.இருதரப்பும் கேட்கப்பட்டது வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது**

3.1) மேற்படி STC.677/2025 என்ற வழக்கின் தீர்ப்பு கடந்த 08.06.2026 ம் பகரப்பட்டது. இந்த நீதிமன்றத்தில் RPR.51/2025 ல் ஒப்படைக்கப்பட்டு இருந்த மனுதாரரின் TN 67 AM 0333 என்ற பதிவெண் கொண்ட CHEVROLET TAVERA B4 பதிவெண் கொண்ட வாகனத்தினை Crl.MP.61/2025 Dated.28.01.2025 வாயிலாக இடைக்காலமாக ஒப்படைக்கப்பட்டதை மனுதாரர் நிரந்தரமாக வைத்துக்கொள்ளலாம்

என்று இந்த நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. எனவே மனுதாரர் வாகனத்தின் RC புத்தகத்தினை மனுதாரரிடம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது. அரசு தரப்பில் அவர் வசம் ஒப்படைக்க ஆட்சேபணை தெரிவிக்கவில்லை. எனவே வழக்கின் சங்கதிகளையும் சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டும் வேறு வழக்கில் ஒப்படைக்காத பட்சத்தில் இந்த வழக்கில் மனுதாரர் வாகனத்தின் RC புத்தகத்தினை நிரந்தரமாக மனுதாரரிடம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது. (மாண்பமைமேல்முறையீட்டு நீதிமன்ற உத்தரவிற்கு உட்பட்டு)

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.07.16 17:06:58 +0530

நீதித்துறை நடுவர்
ஆண்டிபட்டி